## <u>நெல்லிக்குப்பம் நகராட்சி</u>
## <u>நகர் மன்றக் கூட்டம் நிகழ்ச்சி நிரல்</u>

2021–ம் ஆண்டு மே மாதம் 31ம் தேதி (31.05.2021) திங்கட்கிழமை பிற்பகல் 05.00 மணிக்கு நெல்லிக்குப்பம் நகராட்சி ஆணையர் அறையில் நடைபெற உள்ள நகர் மன்றத்தின் அவசரக்கூட்டத்தில் முடிவு செய்யப்படவுள்ள மன்றப்பொருள்கள் விபரம்.

முன்னிலை : – திரு. எஸ் . பார்த்தசாரதி
தனி அலுவலர்,
நெல்லிக்குப்பம் நகராட்சி

**<u>மன்றபொருள்.1.</u>** நகராட்சி பொது சுகாதாரம் திடக்கழிவு மேலாண்மை திட்ட பணிகளை கவனிக்க அரசாணை (நிலை) எண் 101, நாள் 30.04.1997 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நப.3) துறை மூலமாக வழங்கப்பட்ட ஆணையில் நகராட்சியில் இருக்கக்கூடிய குடியிருப்புகள் மற்றும் வணிக நிறுவனங்கள் மற்றும் பொது இடங்களை கணக்கிட்டு நகராட்சியில் பணிபுரிந்த நிரந்தர தூய்மை பணியாளர்கள் கழிய எஞ்சிய பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் நியமித்து பணி மேற்கொள்ள 2017ம் ஆண்டு நகராட்சி மூலமாக அனுமதி கோரி நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டதில் அன்னார் அவர்கள், அவர்களது செயல்முறை ஆணை K.Dis.No.29525/P3/2017 நாள் 14.12.2017ல் 55 பணியாளர்களை மாவட்ட ஆட்சியர் அவர்களது வழிகாட்டு கடிதத்தல் தெரிவித்துள்ளவாறு தினக்கூலி மற்றும் இதர படிகள் சேர்த்து ஒப்பந்த அடிப்படையில் மூன்றாண்டுகள் பணியாளர்களை நியமித்திட ஆணை பிறப்பிக்கப்பட்டு உள்ளது .

அன்னார் வழங்கிய ஆணையின்படி 01.02.2018ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு நகர்மன்ற தீர்மான எண் 48, நாள் 09.02.2018ல் ஜெய் & கோ, கடலூர் என்கின்ற நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழங்கிட மன்றம் அனுமதி வழங்கியதனை அடுத்து நகராட்சி ஆணையர் அவர்கள் ந.க.எண் 3705/2017/'எச்1, நாள் 15.06.2018 பணி உத்திரவு 16.06.2018 முதல் 15.06.2019 முடிய ஓராண்டு காலத்திற்கு வழங்கப்பட்டது. இதனை அடுத்து, இதே தனியார் நிறுவனம் இதே தினக்கூலி அடிப்படையில் பணிமேற்கொள்வதாக சம்மத கடிதம் வழங்கியதின் காரணமாக, மன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு மன்ற தீர்மான எண் 106, நாள் 14.06.2019 இரண்டாண்டுகள் நீட்டிப்பு 16.06.2019 முதல் 15.06.2021 முடிய வழங்கப்பட்டது.

உத்திரவு காலம் 15.06.2021 தேதியுடன் முடிவடைதால் கடந்த மூன்று ஆண்டுகளில் நிரந்தர பணியாளர்கள் வயது முதிர்வு, இறப்பு இவைகளின் காரணமாக தூய்மை பணியாளர்கள் குறைந்துவிட்ட படியால் அரசாணை (நிலை) எண் 101, நாள் 30.04.1997ன்படி தூய்மை பணியாளர்களை கணக்கிட்டு தற்சமயம் தேவைப்படும் எண்ணிக்கைக்கு ஏற்பவும், இவ்வாண்டு மாவட்ட ஆட்சியர் அவர்கள் அங்கீகரிக்கப்பட்ட தினக்கூலி மற்றும் இதர படிகள் கணக்கிட்டு, அதற்கான செலவினத்திற்கும் அனுமதி பெறுவதற்கு உரிய பிரேரணையினை நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், செங்கல்பட்டு அவர்களின் வழியாக நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு அனுப்பி வைத்திடலாம்.

நெல்லிக்குப்பம் நகராட்சி இரண்டாம் நிலை நகராட்சியாகும்.

| | | |
|---|---|---|
| 1. | நகரின் பரப்பளவு | 21.63 ச.கி.மீ. |
| 2. | 2011ன்படி மக்கட்தொகை கணக்கெடுப்பின்படி குடியிருப்புகளின் எண்ணிக்கை | 10,678 |
| 3. | மக்கட்தொகை 2011ன்படி | 46,691 |

அரசாணை நிலை எண் 101ன்படி

| வ.எண் | வேலை விபரம் | கணக்கீடு | அளவுகோலின்படி தேவை |
|---|---|---|---|
| 1. | 250 குடியிருப்புகளுக்கு அல்லது மூன்று கிலோ மீட்டர் சாலைக்கு மூன்று நபர் | $\frac{10678 \times 3}{250}$ | 128 நபர்கள் |

| | | | |
|---|---|---|---|
| | கொண்டக்குழு 10678 குடியிருப்புகளுக்கு | | |
| 2. | நகரின் பிரதான சாலை கடலூர் பண்ணுருட்டி சாலை பூலோகநாதர் கோயில் முதல் ................................................ வரை | 6 கி.மீ. | 6 நபர்கள் |
| 3 | பெரிய லாரிக்கு | 1 | 4 நபாகள் |
| 4. | 3 சிறிய லாரிக்கு | 3 x 3 | 9 நபர்கள் |
| 5 | உரக்கிடங்கு பராமரிப்பிற்கு | 1 | 2 |
| 6 | பேருந்துநிலையம் கழிவறை பராமரிக்க | | 1 |
| 7 | பேருந்துநிலையம் சுத்தம் செய்திட<br>சி மற்றும் டி | | 2 |
| 8 | மார்க்கெட் (மாமிசம் மற்றும் மீன் கடைகள் ) | | 1 |
| | ஆகமொத்தம் | | 153 நபர்கள் |

ஆக மொத்தம் 153 தூய்மை பணியாளர்கள் திடக்கழிவு மேலாண்மை பணியினை நகரில் திறம்பட மேற்கொள்ள தேவைப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1. | அரசாணை (நிலை) எண் 101ன்படி விதிமுறைகளின்படி தேவைப்படும் தூய்மை பணியாளர்களின் எண்ணிக்கை | 153 நபர்கள் |
| 2. | அனுமதிக்கப்பட்ட தூய்மை பணியாளர்கள் வருடம் | 71 நபர்கள் |
| 3. | தற்சமயம் உள்ள நிரந்தர பணியாளர்கள் | 38 நபர்கள் |
| 4. | சுய உதவிக்குழுக்கள்/ தனியார் ஒப்பந்தத்தின் வாயிலாக பணிமேற்கொள்ள தேவைப்படும் பணியாட்கள் | 115 நபர்கள் |

**நகராட்சி பணியாளர்களை கொண்டு துப்புரவுப்பணி மேற்கொள்ளுதல்**
**மதிப்பீட்டு தொகை கணக்கிடுதல்**

| | | |
|---|---|---|
| அடிப்படை ஊதியம் | – | 15700 |
| அகவிலைப்படி | – | 2826 |
| வீட்டுவாடகைப்படி | – | 450 |
| மருத்துவப்படி | – | 300 |
| இதரப்படிகள் | – | 158 |
| ஓய்வூதிய பங்களிப்பு தொகை | – | 1853 |
| மொத்தம் | – | 21287 |

115 நபர்களுக்கு ஒரு மாதத்திற்கு வழங்க வேண்டிய ஊதியம் 115 x 21,287= ரூ.24,48,005/–

| | | |
|---|---|---|
| அ. | 115 நபர்களுக்கு 12 மாதத்திற்கு வழங்க வேண்டிய ஊதியம் | 2,93,76,060/– |
| ஆ. | ஈட்டியவிடுப்பு 115 நபர்களுக்கு ஓராண்டிற்கு ஒப்புடைப்புத் தொகை<br>21,287/2 = 10,644x115 | 12,24,060/– |
| இ | சீருடை மற்றும் தையற்கூலி நபர் ஒருவருக்கு ரூ.3,000/– வீதம்<br>115 x 3000 | 3,45,000 |
| ஈ | காலணிகள் 115 x ரூ.400 | 46,000 |
| உ | பாதுகாப்பு உபகரணங்கள் நபர் ஒருவருக்கு ரூ.3000/– வீதம் | 3,45,000 |
| | ஆகமொத்தம் | 3,13,36,120 |

| | |
|---|---|
| ஒரு வருடத்திற்கு (12 மாதங்களுக்கு) 115 பணியாளர்களுக்கு செலவாகும் செலவின தொகை மொத்தம் | ரூ.3,13,36,120 |

சுய உதவிக்குழு அல்லது ஒப்பந்த அடிப்படையின் வாயிலாக மனித சக்தியை பெற்று (Man Power) துப்புரவு பணிமேற்கொள்ள மதிப்பீட்டுத் தொகை கணக்கிடுதல் (Out Sourcing of man power of SHG / Contract Basis)

| | |
|---|---|
| ஒப்பந்த அடிப்படையில் அமர்த்த வேண்டிய பணியாளர்கள் | **115** |
| மாவட்ட ஆட்சியர் அவர்களின் தினக்கூலி விவரப்படி சந்தை விகிதம் (Market Rate **2019–2020** | ரூ.**395** |
| ஒரு நபருக்கு **26** நாட்களுக்கு வழங்கவேண்டிய தொகை | ரூ.**10,270** |
| **115** நபர்களுக்கு வழங்க வேண்டிய ஊதியம் | ரூ.**11,81,050** |
| ஒரு மாதத்திற்கு ஆகும் செலவு (ESI 4.75%) (56,100x12) | ரூ.**6,73,200** |
| EPF 13.16% (1,55,426x12) | ரூ.**18,65,114** |
| LIC Rs,1000/- Per head | ரூ.**1,15,000** |
| பாதுகாப்பு உபகரணங்கள் ரூ.**3000/–** நபர் ஒருவருக்கு வீதம் | ரூ.**3,45,000** |
| சீருடைகள் மற்றும் தையற்கூலி ரூ.**3000/–** நபர் ஒருவருக்கு வீதம் | ரூ.**3,45,000** |
| **12** மாதங்களுக்கு **115** நபர்களுக்கு **11,81,050 x 12** வீதம் | ரூ.**1,41,72,600** |
| இதரசெலவினங்கள் 94,484x12 | ரூ.**11,33,808** |
| மொத்தம் | ரூ.**1,86,49,722** |

## நோக்குப்பட்டியல்

| | |
|---|---|
| **115** துப்புரவு பணியாளர்களை நகராட்சி வாயிலாக ஊதிய ஏற்ற முறையில் (நிரந்தர பணியாளராக) பணி நியமனம் செய்யப்பட்டால் ஒரு வருடத்திற்கு ஆகும் உத்தேச செலவினத் தொகை | ரூ.**3,13,36,120** |
| மேற்கண்ட பணியினை சுயஉதவிக்குழு / தனியார் ஒப்பந்தத்தின் வாயிலாக மேற்கொண்டால் ஒரு வருடத்திற்கு ஆகும் உத்தேச செலவினத் தொகை | ரூ.**1,86,49,722** |
| வித்தியாசம் | ரூ.**1,26,86,398** |

எனவே அட்டவணையில் கண்டுள்ள **115** பணியாளர்களை மாவட்ட ஆட்சியர் அவர்களின் நிர்ணயிக்கப்பட்ட தினக்கூலி அடிப்படையில் ஊதியத்துடன் இதர பயன்களையும் சேர்த்து சுயஉதவிக்குழுக்கள் அல்லது தனியார் ஒப்பந்த அடிப்படையில் பட்டியல் இணைக்கப்பட்டுள்ள ஊதியத்தின்படி நியமித்துக் கொள்ளவும், அவ்வப்போது மாவட்ட ஆட்சியர் அவர்கள் நியமிக்கும் தினக்கூலி விவரப்பட சந்தை விகிதத்தில் அவ்ஊதியத்தினை உயர்த்திக் கொள்ளவும் மற்றும் இதர பிடித்தங்களை உயர்த்தி வழங்க வேண்டப்பட்டுள்ள கருத்துருவின் மீது அனுமதி மற்றும் உத்திரவு வழங்க நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், செங்கல்பட்டு அவர்களின் வழிமுறையாக நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் உத்திரவு பெற்றிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

(அ.கு) **1.** மன்றம் அனுமதிக்கலாம்.

**2.** இப்பணிக்கான செலவினத்தினை நகராட்சி வருவாய் நிதி / மாநில நிதி / சேவை வரி மூலம் பெறப்படும் நிதி / **14**வது நிதிக்குழு நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**(ந.க.எண் 1431/2021/எச்1)**
**தீர்மான எண் . 72. அனுமதிக்கப்பட்டது .**

<u>மன்றபொருள்.2.</u> **நகராட்சி பொது சுகாதாரம் திடக்கழிவு மேலாண்மை திட்டப்பணியினை செவ்வன செய்திடும் பொருட்டு அரசாணை (நிலை) எண்** 101, **நாள்** 30.04.1997**ன்படி நெல்லிக்கப்பம் நகரில் அமைந்துள்ள குடியிருப்புகள் மற்றும் பிரதான சாலைகளில் துப்புரவுப்பணி மேற்கொண்டிட**

தேவையான பணியாளர்களை அளவுகோலின்படி பணியாளர்களை தனியார் மூலம் ஒப்பந்த அடிப்படையில் பணியாளர்களை நியமித்து வழங்கும்படி நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், செங்கல்பட்டு அவர்கள் மூலமாக நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு

2017ல் கருத்துரு அனுப்பப்பட்டதில், நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை மு.னுளை.சூடி. 29525/ஏ3/2017 நாள் 14.12.2017ல் 55 பணியாளர்களை மாவட்ட ஆட்சியர் அவர்களது வழிகாட்டு கடிதத்தில் அன்றைய சந்தை விகிதத்தில் தினக்கூலி மற்றும் இதர படிகள் சேர்த்து ஒப்பந்த அடிப்படையில் மூன்றாண்டுகள் பணியாளர்களை நியமித்திட ஆணை வழங்கி இருந்தார்.

அன்னார் வழங்கிய ஆணையின்படி 01.02.2018ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு நகர்மன்ற தீர்மான எண் 48, நாள் 09.02.2018ல் ஜெய் ¬கோ, கடலூர் என்கின்ற நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழங்கிட மன்றம் அனுமதி வழங்கியதனை அடுத்து நகராட்சி ஆணையர் அவர்கள் ந.க.எண் 3705/2017/எச்1, நாள் 15.06.2018 பணி உத்திரவு 16.06.2018 முதல் 15.06.2019 முடிய ஓராண்டு காலத்திற்கு பணி மேற்கொள்ள உத்திரவு வழங்கப்பட்டது. ஓராண்டு காலம் பணி செய்து முடியும் சமயத்தில், மேற்கண்ட நிறுவனமே அதே தினக்கூலி அடிப்படையில் தொடர்ந்து இரண்டாடுகள் பணி மேற்கொள்ள சம்மதக்கடிதம் வழங்கியதின் காரணமாக மன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு மன்ற தீர்மான எண் 106, நாள் 14.06.2019ன்படி இரண்டாண்டுகள் நீட்டிப்பு 16.06.2019 முதல் 15.06.2019 முடிய வழங்கப்பட்டது.

பணி உத்திரவு காலம் வருகின்ற 15.06.2021 தேதியுடன் முடிவடைவதால், தற்சமயம் பணி மேற்கொள்ளும் பணியாளர்களை அரசாணை (நிலை) எண் 101, நாள் 30.04.2017ன்படி கணக்கிட்டு அதற்கேற்ப பணியாளர்களை நியமனம் செய்து கொள்ள அனுமதி வழங்கிட நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், செங்கல்பட்டு அவர்களின் வாயிலாக கருத்துரு அனுப்பப்பட உள்ளது. சட்டமன்ற தேர்தல் நன்னடத்தை விதிகள் இரண்டு மாத காலம் நடைமுறையில் இருந்த காரணத்தினால், நகர்மன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்படாத நிலை இருந்த காரணத்தினால் தற்சமயம் நிறைவேற்றப்பட்டு கருத்துரு அனுப்பப்பட உள்ளது.

கருத்துரு அனுப்பப்பட்டு பணியாளர்கள் எண்ணிக்கை குறித்து ஒப்பந்த அடிப்படையில் நியமித்துக் கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களிடமிருந்து உத்திரவு வரப்பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு பணி உத்திரவு வழங்கிடுவதற்கு கால அவகாசம் தேவைப்படுவதினால், மேற்கண்ட நடைமுறைகளை செயல்படுத்தி பணி உத்திரவு வழங்கிடும் வரை தற்சமயம் உள்ள தினக்கூலி மற்றும் இதரபடிகள் சேர்த்து நாள் ஒன்றுக்க நபர் ஒருவருக்கு ரூ.387.90 என்கின்ற விகிதத்தில் மூன்றாண்டுகள் பணி நடைபெற்று வந்தது. தற்சமயம் நடைபெற்று வரும் ஒப்பந்தத்தினை ரத்து செய்து அதே தினக்கூலி அடிப்படையில் 55 பணியாளர்களை தகுதி வாய்ந்த மகளிர் சுய உதவிக்குழு மூலம் பெறப்பட்டு 16.06.2021 முதல் மூன்று மாதங்கள் மேற்கொள்ள அனுமதி வேண்டப்படுகிறது. அதற்கான உத்தேச செலவினம் ரூ.20.00 இலட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதி பெறலாம். சுய உதவிக்குழு மூலம் 55 தூய்மை பணியாளர்களை பணியமர்த்தி பணி மேற்கொள்ளவும், உத்தேச செலவினத்திற்கும் மன்றத்தின் ஒப்புதலுல் வேண்டப்படுகிறது.

(அ.கு) 1. மன்றம் அனுமதிக்கலாம்

2. இப்பணிக்கான செலவினத்தினை நகராட்சி வருவாய் நிதி / மாநில நிதி / சேவை வரி மூலம் பெறப்படும் நிதி / 14வது நிதிக்குழு நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

3. **தற்சமயம்** DBC **பணியாளர்களை அனுப்பி வைத்திடும் குறிஞ்சி மகளிர் சிறுசேமிப்பு மற்றும் சிக்கன நாணய சங்கம்**, **நெசனூர் பாட்டை**, **கீழ்பாதி நெல்லிக்குப்பம் என்கின்ற மகளிர் சுய உதவிக்குழு நல்ல முறையில் செயல்பட்டு வருவதினால் அக்குழு மூலமே தூய்மை பணியாளர்கள்** 55 **பணியாளர்களை திடக்கழிவு மேலாண்மை பணிக்கு அனுப்பி வைத்திட மன்றம் அனுமதிக்கலாம்**.

4. **நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு ரூ**.387.90 **என்கின்ற விகிதத்திலேயே ஊதியம் வழங்கிடவும் மன்றம் அனுமதிக்கலாம்**.

**(ந.க.எண் 1446/2021/எச்1)**
**தீர்மான எண் . 73. அனுமதிக்கப்பட்டது .**

<u>மன்றபொருள்.3.</u> நெல்லிக்குப்பம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள 30 வார்டுகளிலும் உள்ள பொது மக்களுக்கு 13 மேல் நிலை தண்ணிர் தொட்டி மூலம் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்படுகிறது . பாதுகாக்கப்பட்ட குடிநீரில் தொற்று நோய் பரவாமல் இருக்கும் வகையில் தேவையான திரவ குளோரின் கலப்பதற்கு தற்சமயம் 15 தினங்களுக்கு இருப்பு உள்ளது . எனவே குடிநீர் விநியோகம் அவசர அவசியம் கருதியும் , கொரானா காலத்தில் பொது மக்களுக்கு நோய் பரவாமல் தடுக்க குடிநீர் திரவ குளோரின் அவசர அவசியம் கருதி ஒப்பந்தபுள்ளி கோராமல் நேரடியாக 2000 லிட்டர் வாங்க அரசுசெயலாளர், நிதித்துறை கடித ந.க.எண். 4/JS/(MA)/Finance(Salaries)/2020 , நாள். 01.04.2020ன் படியும் மற்றும் மன்ற தீர்மான எண் . 20 நாள். 11.02.2021 ல் பழைய விலை விகிதத்திலேயே Sai Tirupathi Treading Enterprises . Villupuram அவர்களிடம் வாங்க நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் நகராட்சி கோவிட் –19 நிதியிலிருந்து ரூ.34000/– மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது
<u>அலுவலக குறிப்பு:-</u> மன்றம் அனுமதிக்கலாம்.
**(ந.க.எண் .1593/2021/இ1)**
**தீர்மான எண் . 74. அனுமதிக்கப்பட்டது .**

<u>மன்றபொருள்.4.</u> இந்நகராட்சியில் நீர்தேக்கத் தொட்டி காவலராக பணிபுரிந்து வரும் செல்வி. எஸ்.தேன்மொழி, என்பவர் 31.05.2021 அன்று ஓய்வு பெற உள்ளார். அவரது ஊதியத்தில் பிடித்தம் செய்யப்பட்ட சிறப்பு சேமநலநிதித் தொகை (SPF) மற்றும் அதற்கான வட்டி தொகையினை வழங்குமாறு கோரியுள்ளார்.

அன்னாரின் விண்ணப்பம் உரிய பதிவேடுகள் மற்றும் ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டதில் கீழ்கண்டுள்ள விவரப்படி செல்வி. எஸ்.தேன்மொழி, நீர்தேக்கத் தொட்டி காவலர் கணக்கில் உள்ள தொகையினை வழங்கப்பட வேண்டியுள்ளது.

| | | |
|---|---|---|
| 1 | பணியில் சேர்ந்து 2008–2021 வரை சிறப்பு சேமநலநிதி பிடித்தம் செய்யப்பட்ட நாள் | 24.04.2008 |
| 2 | ஓய்வுபெறும் நாள் | 31.05.2021 |
| 3 | சிறப்பு சேமநல நிதி சந்தா தொகை பிடித்தம் செய்த தவணைகள் | 148 தவணைகள் |
| 4 | சிறப்பு சேமநல நிதி கடைசியாக பிடித்தம் செய்யப்பட்ட மாதம் | 05/2021 |

| | | |
|---|---|---|
| 5 | சிறப்பு சேமநல நிதி சந்தா தொகை பிடித்தம் செய்த தொகை | ரூ.2960/- |
| 6 | 2008 முதல் 2021 முடிய கணக்கிடப்பட்ட வட்டித்தொகை (கணக்கீட்டுத்தாள் இணைக்கப்பட்டுள்ளது) | ரூ.1939/- |
| 7 | நகராட்சி (அரசு) பங்குத் தொகை | ரூ .10000/– |
| | மொத்தம் | ரூ.14899/- |

எனவே மேற்கண்டுள்ள விபரப்படி திருமதி. எஸ்.தேன்மொழி, நீர்தேக்கத் தொட்டி காவலர் ஊதியத்தில் பிடித்தம் செய்யப்பட்ட சிறப்பு சேமநலநிதி சந்தா தொகை ரூ. 2960/– ம் அதற்குண்டான வட்டித்தொகை ரூ. 1939/– ம் நகராட்சி அரசு பங்கு தொகை ரூ. 10000/– சேர்த்து மொத்தம் ரூ. 14,899/– வழங்குவதற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்.**

**ந.க. எண். 1466/2021/பி2**

**தீர்மான எண் . 75. அனுமதிக்கப்பட்டது .**

**<u>மன்றபொருள்.5.</u>** நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களின் வாட்ஸ் ஆப் குறுஞ்செய்தியிலும், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் 23.05.2021ல் நடத்திய கொரோனா தொற்று குறித்தான ஆய்வுக்கூட்டத்திலும் கொரோனா தொற்று கண்டவர் எண்ணிக்கை அதிகரித்து கொண்டே செல்வதினால் அவற்றினை கட்டுபடுத்தும் விதமாக நகராட்சி பணியாளர்கள், DBC பணியாளர்கள் மற்றும் தன்னார்வலர்கள் மூலமாக நகரில் உள்ள அனைத்து குடியிருப்புகளில் வசிக்கக்கூடிய பொதுமக்களுக்கு உடல் வெப்பநிலை, ஆக்ஸிஜன் மற்றும் நாடி துடிப்பு அளவு கண்டறிவதற்குரிய தெர்மாமீட்டர் மற்றும் பல்ஸ் ஆக்ஸி மீட்டர்கள் தேவைப்படுகின்றன. தற்சமயம் போதிய அளவில் தெர்மாமீட்டர் இருப்பு உள்ளது. பல்ஸ் ஆக்ஸி மீட்டர் இந்நாள் வரை வாங்கப் பெறாமல் இருப்பதினால் 50 எண்ணிக்கை உள்ளூர் நிறுவனம் அப்பலோ பார்மஸி, நெல்லிக்குப்பம் என்கின்ற மருந்தகத்திடம் வாங்கிட அனுமதியும், அதற்கான செலவினம் ரூ.87,500/– (1 No X Rs.1,750/-) தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் நடவடிக்கை மேற்கொண்டிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் நடவடிக்கை மேற்கொண்டதினை மன்றம் அனுமதிக்கலாம்.
3. இச்செலவினம் அரசு வழங்கிய கொரோனா தடுப்பு நிதியிலிருந்து செலவு மேற்க்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.1030/2020/எச்1**

**தீர்மான எண் . 76. அனுமதிக்கப்பட்டது .**

**<u>மன்றபொருள்.6.</u>** நெல்லிக்குப்பம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள நகராட்சி அலுவலக வளாகத்தின் பின்புறம் உள்ள குப்பைகளை உரமாக்கும் மையத்தில் உரங்களை காய வைப்பதற்கு ஏற்றவாறு சிமெண்ட் தளம் இல்லை . இதன் காரணமாக மக்கும் குப்பைகளிலிருந்து தயாரிக்கப்படும் உரங்கள் வீனாகிறது . எனவே நுண்ணுயிர் உரமாக்கும் மையத்தின் முன் பகுதியில் சிமெண்ட் தளம் அமைக்கவும் , அதே போல் சரவணபுரத்தில் உள்ள நுண்ணுயிர் உரமாக்கும் மையத்தின் முன் பகுதியில் சிமெண்ட் தளம் அமைத்து அதன் சுற்று சுவர் பகுதியில் வெளி ஆட்கள் உள்ளே வராமல் தடுக்கும் வகையில் இரும்பு

முள் வேலி அமைக்க தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.575000/— ஐ நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது .
**அலுவலக குறிப்பு:-** மன்றம் அனுமதிக்கலாம்.
**(ந.க.எண் . 1065/2021/இ1)**
**தீர்மான எண் . 77. அனுமதிக்கப்பட்டது .**

**மன்றபொருள்.7.** நெல்லிக்குப்பம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் உள்ள அண்ணாநகர் மாரியம்மன் கோயில் தெரு மற்றும் முஸ்லிம் மேட்டுத் தெரு சந்திப்பில் உள்ள கழிவு நீர் கால்வாயில் உள் சிறுபாலங்கள் பழுதடைந்துள்ளதால் அப்பகுதிகளில் உள்ள கழிவு நீர்கள் அடைப்பட்டு அப்பகுதியில் உள்ள சிமெண்ட் சாலையில் செல்கிறது என்றும் இதனால் தொற்று நோய் பரவும் அபாயம் ஏற்படும் நிலையுள்ளது என்றும் அப்பகுதியில் பழுதடைந்த 2 சிறு பாலங்களையும் உடனடியாக புதியதாக கட்டித் தருமாறு நகராட்சி துப்புரவு அலுவலர் அவர்கள் தெரிவித்துள்ளார்கள் . எனவே பொது மக்கள் நலன் கருதியும் , சுகாதார கேடு ஏற்படாமல் தடுக்கும் வகையில் இரண்டு சிறு பாலங்கள் அமைக்க தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.200000/— ஐ நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது .
**அலுவலக குறிப்பு:-** மன்றம் அனுமதிக்கலாம்.
**(ந.க.எண் . 1237/2021/இ1)**
**தீர்மான எண் . 78. அனுமதிக்கப்பட்டது .**

**மன்றபொருள்.8.** நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், செங்கற்பட்டு அவர்களின் குறுஞ்செய்தியின் படியும், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் கொரோனா— 19 தொற்று சம்மந்தமான ஆய்வுக்கூட்ட வாயிலாகவும், 24.05.2021 முதல் தமிழகம் முழுவதும் ஊரடங்கு அறிவித்துள்ளபடியால், பொது மக்களுக்கு கிடைக்கக்கூடிய காய்கறி, மளிகை பொருட்கள் மற்றும் பழ வகைகள் அவர் வீடுகள் தேடி விற்பனை செய்யக்கூடிய அளவில் நடமாடும் விற்பனை அங்காடிகளை உள்ளாட்சி நிறுவனம் மூலம் அனுமதி பெற்று செல்லக்கூடிய அளவில் வாகனங்களை ஏற்பாடு செய்து அனுப்பி வைத்தும்படி அறிவுறுத்தியதுடன் வாகனங்களுக்கு அனுமதி சீட்டு மற்றும் நகராட்சி பெயரில் பேனர்கள் வழங்கும்படி தெரிவித்துள்ளதினால் பேனர்கள் (அ) 4' X 5' = 30 பேனர்கள்.

கொரோனா தொற்று கண்டவர்கள் பகுதிகளில் மேலும் தொற்று பரவாமல் தடுத்திடும் வகையில் அப்பகுதிகளில் சிறப்பு மருத்துவ முகாம்கள் நடத்திட வேண்டும் என அறிவுரைகள் வழங்கியது காரணமாக, முகாம்கள் நடைபெறக்கூடிய இடங்களில் கட்டுவதற்கு

(ஆ) 5' X 6' = 6 பேனர்கள். கொரோனா தொற்று கண்டவர்களின் எண்ணிக்கையினை வார்டு வாரியாக நகர் வரைபடத்தில் சுட்டி காட்டுவதற்கு

(இ) கலர் நகர வரைபடம் – 5 எண்ணிக்கைகள்.

ஆக அ, ஆ மற்றும் இ குறிப்பிட்டுள்ள பேனர்கள், வரைபடங்கள் உடனடியாக தேவைபடுவதினால், உள்ளூர் நிறுவனத்தில் அச்சிட்டு பெற நடவடிக்கை மேற்கொள்ளவும், அதற்கான உத்தேச செலவினம் ரூ.15,000/—க்கும் அவசர அவசியம் கருதி கோவிட்—19ன் கீழ் தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் நடவடிக்கை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:
1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் நடவடிக்கை மேற்கொண்டதினை அங்கிகரிக்கலாம் .
3. இச்செலவினத்தினை கோவிட் – 19 கொரோனா தடுப்பு நடவடிக்கைகளுக்காக வழங்கப்பட்ட நிதியிலிருந்து மேற்க் கொள்ளலாம் .

**ந.க.எண்.1030/2020/எச்1**
**தீர்மான எண் . 79. அனுமதிக்கப்பட்டது .**

**மன்றபொருள்.9.** நெல்லிக்குப்பம் நகராட்சி அம்மா உணவகத்தில் உள்ள மிக்ஸி கிரைண்டர் பழுதடைந்து சமையல் செய்ய இயலாமல் உள்ளது . இதனால் சட்னி மற்றும் மசாலா சாமாண்கள் அறைக்க முடியாமல் உள்ளது எனவே மேற்படி பணியின் அவசர அவசியம் கருதியும் பொது மக்கள் நலன் கருதியும் தற்சமயம் " குரோனா வைரஸ்'' காரணமாக உணவு தயாரிப்பது தடைபடாமல் இருக்க நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 15ன் கிழ் புதிய மிக்ஸி கிரைண்டர் நேரடியாக " வின் எண்டர்பிரைசஸ் " 46 A , வெள்ளிமோட்டான் தெரு , கடலூர் அவர்களிடம் வாங்கப்பட்டது . அதற்கான பட்டியல் தொகை ரூ.12900/– நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொண்டதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது .

**அலுவலக குறிப்பு:-** மன்றம் பதிவு செய்யலாம்.

**(ந.க.எண் . 1445/2021/இ1)**

**தீர்மான எண் . 80. அனுமதிக்கப்பட்டது .**

**மன்றபொருள்.10.** நெல்லிக்குப்பம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் உள்ள அனைத்து மேல்நிலை தண்ணீர் தொட்டியில் உள்ள மின் இணைப்புகளில் பழுதடைந்த கெப்பாசிட்டர் மாற்றவும் இல்லாத இடங்களில் பொருத்தவும் , மேல்நிலை தண்ணீர் தொட்டி வளாகத்தில் மின் விளக்கு வசதி மற்றும் சிறு சிறு பழுதுகள் **கீழ் கண்ட** ஆழ்துளை கிணறு உள்ள கட்டிடங்களில் செய்ய தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.300000/– ஐ நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது .

1. நகராட்சி வளாகம் மேல் நிலை நிர்த் தேக்க தொட்டி 40 KVA
2. ஜம்புலிங்கம் பூங்கா மேல் நிலை நிர்த் தேக்க தொட்டி 30 KVA
3. மாருதி நகர் மேல் நிலை நிர்த் தேக்க தொட்டி 8 KVA
4. முள்ளிகிராம்பட்டு மேல் நிலை நிர்த் தேக்க தொட்டி 8 KVA
5. வான்பாக்கம் மேல் நிலை நிர்த் தேக்க தொட்டி 8 KVA
6. விஸ்வநாதபுரம் மேல் நிலை நிர்த் தேக்க தொட்டி 5 KVA
7. விஸ்வநாதபுரம் மேல் நிலை நிர்த் தேக்க தொட்டி 10 KVA
8. திருக்கண்டேஸ்வரம் காலனி மேல் நிலை நிர்த் தேக்க தொட்டி 3 KVA
9. வாழப்பட்டு மேல் நிலை நிர்த் தேக்க தொட்டி 8 KVA
10. வாழப்பட்டு மேல் நிலை நிர்த் தேக்க தொட்டி 8 KVA
11. அம்பேத்கார் நகர் மேல் நிலை நிர்த் தேக்க தொட்டி 8 KVA
12. புதுக்குப்பம் மேல் நிலை நிர்த் தேக்க தொட்டி 5 KVA
13. ராஜீவ் காந்தி நகர் மேல் நிலை நிர்த் தேக்க தொட்டி 5 KVA
14. சுல்தான்பேட்டை போர்வெல் 3 KVA
15. தேவநாதன் நகர் போர்வெல் 5 KVA

**அலுவலக குறிப்பு:-** மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண் . 1140/2021/இ1)**

**தீர்மான எண் . 81. அனுமதிக்கப்பட்டது .**

**மன்றபொருள்.11.** நெல்லிக்குப்பம் நகராட்சி பொறியியல் பிரிவிற்கு அத்திவாசிய சிறு சிறு பணிகள் மேற்கொள்ள அலுவலக முன் பணமாக ரூ.5000/– நகராட்சி பொறியாளருக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு . மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண் . 0324/2021/இ1)**

**தீர்மான எண் . 82. அனுமதிக்கப்பட்டது .**

**மன்றபொருள்.12.** நெல்லிக்குப்பம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் திரைபடப்பிடிப்பு நடைபெறும் நேர்வில் நாள் ஒன்றுக்கு நகராட்சிக்கு ஏற்றாற்போல் தொகை வசூலிக்க வேண்டும் என நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் அறிவுரை வழங்கப்பட்டது.

எனவே, இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் திரைபடப்பிடிப்பு நடைபெற்றால் படபிடிப்புக்குழு நாள் ஒன்றுக்கு ரூ.**3000/–** தொகை செலுத்தப்பட வேண்டும் எனவும், மற்ற வகையான எவ்வித செலவுகளையும் நகராட்சி செய்து தர இயலாது என்பதையும், படபிடிப்பு நடைபெறும் நேர்வில் குழுவினருக்கோ, நகராட்சி பொது மக்களுக்கோ,பொது இடங்களுக்கோ எவ்வித இடையூறு மற்றும் சேதாரம் இல்லாமல் மேற்படி படபிடிப்புக்குழு செயல்படவேண்டும் என்பதையும் குழுவினருக்குத் தெரிவிக்கலாம். மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு:-</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்:-1840/2021/F1**

**தீர்மான எண் . 83. அனுமதிக்கப்பட்டது .**

தனி அலுவலர்,
நெல்லிக்குப்பம் நகராட்சி